CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# இலங்கை அரசாங்கத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

பொருளாதாரச் சீரமைத்தல் மற்றும் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதிக்கு சமனான, 48 மாதங்களிற்கு மேற்பட்ட ஒரு விரிவாக்க நிதி வசதிக்கான ஓர் உடன்படிக்கையை சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கை அரசாங்கத்துடன் எட்டியுள்ளமை தொடர்பான ஓர் அறிவித்தலை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வரவேற்கிறது. ஒரு சர்வதேச கடன் வழங்குவோர் மாநாடு, உள்நாட்டு ரீதியாக சில நடைமுறைகளின் அமுல்படுத்துதல் மற்றும் சர்வதேச நாணய நிதியப் பணிப்பாளர்கள் சபையின் இணக்கம் என்பன ஏதேனும் பணம் வழங்கப்படுவதற்கு முன்பாக அவசியமானவையாக இருப்பதையும் நாங்கள் அறிந்து கொள்கிறோம். சீரமைத்தலின் சுமை வறியவர்களை அளவுக்கதிகமாக பாதிக்காதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களுக்கான நலனோம்புகை நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கம் அதன் கொள்கைகளின் தார்மீகம் மற்றும் அதன் உள்ளடக்கங்கள் பற்றி பொதுமக்களுடன் தொடர்பாடுவதற்கான முக்கிய தேவையின் அடிப்படை அவசியத்தையும் மா.கொ.நி. இச்சமயத்தில் வலியுறுத்துகிறது. நாட்டின் மக்களை ஐக்கியப்படுத்தி மற்றும் நல்லிணக்கப்படுத்துகின்ற, மக்களின் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றைக் கொண்ட ஓர் அரசாங்கம் இத்தருணத்தில், எங்களிற்குத் தேவை என்பதை மா.கொ.நி. உறுதியாக நம்புகிறது. எனவே இது தொடர்பில், மாற்று அபிப்பிராயம் கொண்டவர்களை அடக்கியொடுக்கும் மற்றும் குறிப்பாக மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு எதிராக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உபயோகிக்கும் முயற்சிகளிலிருந்து விலகியிருப்பதற்கு அரசாங்கத்தை மா.கொ.நி. கோருகிறது. சட்டத்தினாட்சியை மீறுபவர்களுக்கெதிராக உபயோகிக்கப்படக்கூடிய ஓர் எண்ணற்ற ஏனைய சட்டங்களை இலங்கை கொண்டுள்ளது. அதன் பாவனையில், நடைமுறை ரீதியாக சட்டப்படி ஒரு நிறுத்தி வைத்தல் உள்ள நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை உபயோகிப்பதை மா.கொ.நி. முழுமையாகக் கண்டிக்கின்றதுடன், ஓர் அச்சுறுத்தும், கருத்து வேறுபாடுகள் மற்றும் ஏமாற்றங்களை வெளிப்படையாகக் காண்பிப்பதை சுயமாகவே கணிக்கும் வகையில் இருக்கக்கூடிய நிலைமைகளை உருவாக்கி அவர்களைப் பிளவுபடுத்துவதற்குப் பதிலாக, முன்னாலுள்ள பொருளாதாரச் சவால்களுக்கு முகங் கொடுப்பதற்கு இந்நாட்டு மக்களை நல்லிணக்கப்படுத்தி மற்றும் ஐக்கியப் படுத்துவதற்கு அரசாங்கம் செயற்படுவதற்கும் அது வலுவாக வலியுறுத்துகின்றது. அடுத்த பத்து நாட்களிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் இலங்கை விடயம் விவாதிக்கப்படுமென்பதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இந்த விவாதங்களில் ஓர் அம்சமாக இருக்குமென்பதிலும் சந்தேகம் எதுவுமில்லை.

ஆட்சிமுறையின் முன்னொருபோதுமில்லாத இந்த நெருக்கடியான சவாலைக் கவனம் கொள்வதில் அரசாங்கம் ஒரு முழுமையான மற்றும் மனித உரிமைகள் ரீதியில் சிநேகபூர்வமான கண்ணோட்டத்தை ஏற்றுக்கொள்ளல் வேண்டுமென அரசாங்கத்தை மா.கொ.நி. வலியுறுத்துகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான திருத்தங்களுடன் அவை வெற்றியடைவதற்கு

அரசாங்கம் மற்றும் ஆட்சிமுறையின் சட்டபூர்வதன்மையை உறுதிப்படுத்தும் அரசியல் பிரச்சினைகளுக்கு கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்பது மிக முக்கியமானதாகும்.

அரசாங்கம் இந்தக் கண்ணோட்டத்தை ஏற்றுக்கொண்டு இலங்கையில் ஆட்சிமுறை மற்றும் அரசாங்கத்திற்கான ஒரு புதிய சமூகப் பிணைப்புடன் பொருளாதார மீட்சிக்கான பாதையில் நாட்டைப் பாதுகாப்பாக இடுமென மா.கொ.நி. வலுவாக வலியுறுத்துவதுடன் அதனை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka

Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org